www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

பிரெஞ்சுக் கிளை

21.07.1991

# யூலைப் படுகொலை

கனமேறிய இதயங்களுடன், நினைவு கூருகின்றோம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து, தமிழ் மக்கள் மீதான சிங்கள மேலாதிக்கத்தின் பயங்கரவாதம், பல வழிகளில், பல வடிவங்களில் வெளிப்பட்டன.
சிங்கள அரசுகளால் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்ட பெரிதும், சிறிதுமான இனக்கலவரங்கள், ஆயிரக்கணக்கில் எம் மக்களைக் காவு கொண்டன. எமது மக்களின் உழைப்புகள் சூறையாடப்பட்டன. எமது கலைகள், பாரம்பரியங்கள், அடையாளங்கள் நீண்டகால நோக்கில் அழிக்கப்பட்டன.
ஈழத்தமிழ் மக்களின், துன்பம் நிறைந்த வரலாற்றில், 83 ம் ஆண்டு யூலைப் படுகொலை ஆறாத காயத்தை ஏற்படுத்திச் சென்றது.
கைதிகளாகி, சிறைக்கம்பிகளுக்குப் பின்னால், நிராயுதபாணிகளாக நின்ற 53 தமிழர்கள், ஆயுதம் தரித்த மிருகங்களால் வேட்டையாடப்பட்டனர்.
உலகிலேயே எங்குமே நிகழ்ந்திராத கொடுமை, புத்த பூமியிலே நிகழ்த்தப்பட்டது.
வீடுகள், கடைகள், மத வழிபாட்டுத்தலங்கள் எல்லாம் தமிழர்களுடன் சேர்த்து எரிக்கப்பட்டன. பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். குழந்தைகள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர்.
மனித நாகரீகம் வெட்கித்து நின்றது.
தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன, உணர்வுகள் மறுக்கப்பட்டன, உயிர்வாழ்தலுக்கான உத்தரவாதமும் மறுக்கப்பட்டது. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த பின் 1956, 1958, 1974, 1977, 1981 என்ற வரிசையிலே தொடர்ந்த, மிக மோசமான இன அழிப்பு வடிவமான இனக்கலவரங்களின், முதிர்ச்சி நிலையை, 1983 ம் ஆண்டுக் கலவரம் புலப்படுத்திநின்றது.
இந்த நிலை இன்றும் தொடர்கின்றது. சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்ப் பிரதேசங்கள் கேட்பாரற்று வேட்டையாடப் படுகின்றன. இனஅழிப்பு, புதிய அங்கீகாரங்களுடன், அரசின் வெளிப்படையான கட்டளைகள் மூலம் "கொக்கட்டிச் சோலைகளில்" நிறைவேற்றப்படுகின்றன.
சிங்கள இனவாத பூதத்திடமிருந்து, எமது மக்களைக் காத்தலுக்கான உணர்வுபூர்வமான போராட்டம், முன்னெப்போதும் இல்லாத வகையில் உறுதியுடனும், ஒப்பற்ற தியாகங்களுடனும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.
நீண்டகால அடக்கு முறைக்கு நேரடியாக முகம் கொடுத்த நாம், அதிலிருந்து எம்மையும் எமது எதிர்கால சந்ததியையும் காப்பதே எமக்குண்டான இன்றுள்ள பிரதான கடமையாகின்றது.
உறுதியான தேசியத் தலைமையின் வழிகாட்டலில் திரண்டுள்ள மக்கள் படையைப் பலப்படுத்தி எமது தேசிய இனத்தின் இன்றைய சந்ததியையும், எதிர்கால வழித்தோன்றல்களையும் காக்கும் புனிதப் பணியில் எம்மை இணைத்துக்கொள்வோம்.
எமது மக்களையும் எமது மண்ணையும் பாதுகாப்பதற்கான எமது தேசிய விடுதலைப் போராட்டம், அரசியல், இராணுவ தளங்களில் இறுதி இலட்சியம் வரை முன்னேறியே தீரும்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்